செய்திக்குறிப்பு எண்: 210 நாள்: 15.11.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம்

அவர்களின் அறிக்கை – 15.11.2014

தர்மபுரி மாவட்டம், **ஈச்சம்பாடி அணையிலிருந்து** வலது மற்றும் இடதுபுற வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விடுமாறு விவசாய பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, தர்மபுரி மாவட்டத்திலுள்ள, ஈச்சம்பாடி அணையிலிருந்து வலது மற்றும் இடதுபுற வாய்க்கால்களில் 16.11.2014 முதல் தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது. இதனால், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலுள்ள **6,250 ஏக்கர்** நிலங்கள் பயன்பெறும்.

விழுப்புரம் மாவட்டம், **மணிமுக்தா நதி அணையிலிருந்து** பழைய மற்றும் புதிய பாசன பரப்பு நிலங்களுக்கு தண்ணீர் திறந்து விடுமாறு விவசாய பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, விழுப்புரம் மாவட்டத்திலுள்ள மணிமுக்தா நதி அணையிலிருந்து பழைய மற்றும் புதிய பாசன பரப்பு நிலங்களுக்கு பாசனத்திற்கு 16.11.2014 முதல் தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது. இதனால், விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டத்திலுள்ள **4,250 ஏக்கர்** நிலங்கள் பயன்பெறும்.

**ஓ. பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை:9